தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௯	திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௪ விசய— புரட்டாசி 1953—செப்டம்பர்	மலர் ௬

‘தமிழ் விழா’

சென்ற அக்டோபர் திங்கள் இறுதி மூன்று நாட்களிலும், இந்தியப் பெருநிலப் பரப்பின் தலைநகராய தில்லி மாநகரில் நிகழ்ந்த "தமிழ் விழா" குறிப்பிடத்தக்க விழாவாகும். தமிழின் தொன்மையினையும், மேம்பாட்டினையும் வடநாட்டவர் மட்டுமன்றி உலகினரே ஓரளவுக்குத் தெரிந்து கொள்ளும் வண்ணம் நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன. இந்த விழா தமிழ்மொழித் தொடர்பான விழாவாக விருந்தாலும், தென்னாட்டுள் ஏனைய மொழிகட்கும் சிறப்புத்தரும் விழாவாகும். இவ்விழாவில் தமிழில் நல்ல பயிற்சியும் பற்றும் கொண்ட பெருமக்கள் பலரால் பயனுள்ள விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன. இவைமட்டு மன்றித் தமிழின் ஏனைய இசை, கூத்து ஆகிய பகுதிகளும் நிகழ்த்துவிக்கப்பட்டன. கலைக்காட்சி ஒன்றும் திறந்து வைக்கப்பட்டதாக அறிகின்றோம். தமிழ் மொழியும் தமிழ்ப் பண்பாடும் இந்தியநாட்டின் தென்கோடியில் இன்று நிலவினும், ஒருகாலத்தில் இமயத்தொட்டு குமரிமுனை வரையிலும் பரவிப் பேரொளியுடன் திகழ்ந்தவாற்றைப் பல சான்றுகளால் விளக்கலாம். இதுமட்டுமன்றி உலகமெங்கணுமே மங்காத் தமிழொளி ஒருகாலத்தில் வீசியதென்றும் கூறலாம். இந்த உண்மைகளைத் "தமிழ் வளர்ச்சிக்கழகத்தினை நம் நாட்டில் முதற்கண் தோற்றுவித்தவரும், "தமிழ்க்கலைக் களஞ்சியம்" தொகுத்துத் தமிழுக்குக் கலைத்துறையில் ஆக்கம் தேடி வருபவரும் ஆகிய மாண்புமிக்க, அறிஞர், திரு, தி. சு. அவினாசிலிங்கம் செட்டியாரவர்கள் தம்முடைய உரையில் குறிப்பிட்டுள்ளனர். நிற்க.

இவையெல்லாம் காலம் கடந்த பழம் பெருமையாகும், இக்காலத்தில் தமிழ் விழாவினைத் தில்லியில் வைத்ததும். இதனை மக்கள் தலைவராகிய மேன்மை தங்கிய பேரறிஞர், திரு. இராசேந்திரப் பிரசாது அவர்கள் துவக்கிவைத்ததும்

இந்தியமக்களின் துணைத்தலைவரும், உலகில் சிறந்த பேச்சாளியும், தத்துவ அறிஞருமாய திரு. இராதாகிருட்டினனவர்கள் தலைமை தாங்கியதும், அறிஞர் பலர், தமிழ் இலக்கியம், பண்பாடு, ஆயவற்றைப் பற்றிப்பேசவைத்ததும் தமிழரக்கத்திற்குப் ஓரளவு அரண் செய்வதாகும். அன்று ஆட்சியின் பேரால் அனைத்திந்தியாவினும், வாணிகத்தின் பெயரால் ஏனைய நாடுகளிலும் சென்ற தமிழ், இன்று அறிஞரின் அணைப்பில் தில்லி நகரில் சென்றுள்ளமையைக் காணுகின்றோம். தென்னாட்டவரைத் தமிழன் என்றோ, மலையாளி என்றோ, பிறவகையினாலோ அழைக்காமல் "மதராசி" என்றே அழைத்துத் தமிழையே மறந்த வடநாட்டவருக்குத் தமிழ் என்றோர் மொழியுண்டு, தனியே அதற்கோர் சிறப்புண்டு என்று எண்ணுமளவுக்காவது "தமிழ்விழா" பயன் பட்டிருக்குமென எண்ணுகின்றோம். விழாவானது பல்லாற்றானும் சிறக்கப் பெருந்தொண்டு புரிந்த தில்லி தமிழ்ச்சங்கத் தலைவரும் பேரறிஞருமாய, திரு. K. S. கிருட்டினனவர்களையும் ஏனைய அன்பர்களையும் பாராட்டிப் பல்லாண்டு கூறுகின்றோம்.

துயரம்.

தமிழ்ப்பெரியார் திரு, வி. கலியாணசுந்தரனார் தமது 71 ஆவது ஆண்டில் 17—9—53 வியாழக்கிழமை மாலை இறந்தார் என்னும் செய்தியைக் கேட்டு வருந்துகின்றோம். உலகில் பிறப்பதும், இறப்பதும் இயற்கை நியதியாயினும், நாளெல்லாம் தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளராகவும் பழமைக்கும், புதுமைக்கும் அரசியல் முதல் சமயத்துறை வரையிலும் இணைத்துப்பார்த்து அரிய கருத்துக்களைப் பேசியும், எழுதியும் வந்த ஓர் ஒப்பற்ற அறிஞராகத் திகழ்ந்த வருமாய தமிழ்ப் பெரியாரை இழக்கத் தமிழகம் எங்ஙனம் துணியும்? அங்ஙனம் துணியாத் தமிழகம் இன்று துயர்க்கடலுள் துன்புறுகின்றது. துன்புறும் தமிழகத்துக்கு அவர் வரைந்து போய எண்ணங்கள் ஆறுதலளித்து வழிகாட்டுமாக.

வித்துவான், அ. பொன்னண்ணு களத்தில்வென்ருர்.

விசய ஆண்டு வைகாசித்திங்கள் 23-ஆம் நாள் வெள்ளிக்கிழமை, சாத்தனூர் சாமியய்யாச் சோழகர் மகனும், திரு. அப்பு வாண்டையார் அவர்கள் மருகனும் என் தங்கை மகனுமாகிய இராசரத்தினச் சோழகர் இறைவன் திருவடி நிழ லடைந்தமை குறித்த இரங்கற்பா.

இராசரத் தினமாஞ் சோழர் எனும்பெயர் இயைபின் பான்மை
தராதலம் புரக்குந் தோற்றம் தண்ணெளி பரப்பம் பண்பு
விராவிடும் உறவின் மேன்மை விரும்பியு முடிக்கும் மாற்றம்
சிராமலை திகழ்சோ ணுட்டில் செறிந்திடும் வாழ்க்கை காட்டும்

ஊக்கமே செல்வம் என்னும் உறுதியை மனத்துள் உன்னி
ஊக்கமே கொண்டு நாளும் உறுபொருள் எய்தி நின்ருய்
ஆக்கமே அறமும் இன்பும் அளித்திட வல்ல தென்னும்
நோக்கமே குறிக்கொண் டென்றும் நுணங்குடல் உண்மை யோராய்

தக்கதோர் குலத்துப் பெண்ணை தருமணம் புரிய வெண்ணி
மிக்கநற் செல்வங் கல்வி மிளிர்அப்பு வாண்டை யார்தம்
தக்கசீர் மகளாம் நங்கை தகையுறு மனைவி யாக
மக்களால் மகிழ்ந்து மாமன் மாளிகை பொலிய வாழ்ந்தாய்.

மனைவியின் இனிய மாண்பு மக்களின் மழலைச் சீர்மை
மனைநலஞ் சிறத்தற் காகும் மற்றுள பலவும் பெற்று
நனிவளம் நல்கும பொன்னி நதிக்கரை சாத்த னூரில்
தனியர சென்னச் சார்ந்தோர் சாற்றிட மேன்மை யுற்ருய்.

இருபெருங் குடியும் ஓங்கும் இயல்பினில் ஒழுகும் நாளில்
பொருவரும் ஈவழ்க்கை கண்ட பொருமையின்மிக்கோர் கண்ணே (று)
உருவினில் உருவப் பாய்ந்தோ உற்றநோய் தீர்ப்பார் யாரும்
தெரிதரல் அருமை யாகத் திகைப்பினில் உழந்தார் அந்தோ!

தன்னுடன் பிறந்த தங்கை தலைவனை யிழந்த துன்பம்
அன்னவர் மக்கள் வாழ்க்கைக் காவன பலவும் ஆற்றல்
பின்னவன் இல்வாழ் வோம்பிப் பேறெலாம் அடையும் ஆவல்
இன்னன உன்ற னுள்ளத் திருந்துயர் விளைத்த அந்தோ.

முன்னுளோர் புகழ்மைக் கெல்லாம் முதன்மையன் என்ன வந்தாய்
பின்னுளோர் எவரும் பேசும் பெருமையின் எல்லை யானாய்
தன்னுளே யிருந்த நோயின் தன்மையை யுணரா வண்ணம்
உன்னுளே மறைந்து காலன் உயிரினைக் கவர்ந்தான் கொல்லோ ?

இம்மைநற் பயனா யுள்ள இரும்புகழ் எய்தப் பெற்றாய்
அம்மையில் அழிவி லின்பம் அடைதற்கு விழைந்தாய் கொல்லோ ?
உம்மையே பற்றாய் உள்ள உயிர்மனை மக்கள் அன்னை
தம்மையுங் கவல விட்டுத் தனித்துறல் தகுதி யாமோ ?

மருத்துவக் கூடத் துள்ளே மன்னுயிர் பிரிந்த காலை
மருத்துவர் சிகிச்சை செய்தோர் மற்றுளோர் எவருங் கூடி
வருத்துறல் கண்ணீர் காட்ட வடிவழ கிளமைத் தோற்றம்
பரித்தமெய் பார்த்துப் பார்த்துப் பருவரல் உற்றார் அந்தோ !

மற்றுநின் மனைவிமக்கள் மைத்துனர் மாமன் மாமி
பெற்றதாய் தங்கை அத்தை பிறந்தவர் சிறிய தந்தை
மற்றுள நண்பர் சுற்றம் பரிவுடன் உழைப்பார் யாரும்
உற்றழு திரங்கும் ஓசை உவர்க்கடல் ஆர்ப்பை ஒப்பாம்.

ஆண்டு விசய அணைந்தவை காசிவெள்ளி
ஈண்டிரு பத்தோ டிரண்டொன் றில்—வேண்டும்
இராச இரத்தினச் சோழர் இறைதாள்
விரவியின் புற்றார் விரைந்து.

கலைச் சொல்லாக்கம்.

வி. பொ பழனிவேலன், தமிழகம், திருத்துறைப்பூண்டி.

தமிழன்பர்களே !

அண்மையில் தமிழ் எழுத்துக்களின் சீர்திருத்தக் குழுவினர் வகுத்த திருத்தங்களை அரசினர் ஒப்புக்கொண்டு அவ்வாறே இனி எல்லா அரசியல் அலுவலகங்களிலும், நூல் வெளியீடு களிலும் பயன்படுத்தலாம் என்று கூறிவிட்டனர் எனத் தெரி கிறது. இஃது ஒருவாறு ஒப்பத்தக்கதே யாயினும் இன்னும் பல தமிழ்ப் பேரறிஞர்களைக் கலந்து ஆய்ந்து அறிவித்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். எழுத்துக்களின் எண்ணிக்கையைச் சுய பொறிக்கேற்பக் குறைக்கவும் இடமுண்டு. தமிழ் வரிவடிவம் பண்டு முதல் இன்றுவரை அடைந்துள்ள மாறுதல் தமிழறிஞர் ஒவ்வொருவரும் நன்கறிவர்.

தமிழறிஞர்கள் இவ் எழுத்துச் சீர்திருத்தம் செய்ததோ டமைந்து விடாது தமிழில் வந்து கலந்து வழங்கிவரும் பிற மொழிச் சொற்களுக்கு நேரான "செந்தமிழ்ச்" சொற்களை ஆய்ந்து அறிந்து வெளியிட்டால் தமிழின் தூய்மை கெடாம லிருப்பதற்கு வழியுண்டு. தமிழ் தனித்து இயங்கக்கூடும் என் பதை யாவரும் அறிய வாய்ப்பு எற்படும்.

அறிவியல் நூல், உள நூல், வான நூல் ஆகியவற்றில் பயன் படும் ஆங்கில சொற்களுக்கும் பொருந்தும் தமிழ்ச் சொற்கள் ஆக்கப்பட்டுவிட்டால் நூல் எழுதுவோர் அவற்றையே பயன் படுத்துவர். பயிலுவோர்க்கு இடர்ப்பாடு இன்று. மொழியும் வளம்பெறும். "தமிழில் சமய சம்பந்தமான கருத்துக்களைத் தெரிவிக்கச் சொற்கள் உளவேயன்றி அறிவியல் முதலிய கருத் துக்களுக்கு ஏற்ற சொற்கள் இல்லை. என்ற குறை நீங்கும் தமிழ் மொழியும் ஓங்கும். பல ஆங்கிலச் சொற்களை மக்கள் பேச்சு வழக்கில் பயன்படுத்தி வருகின்றனர். சிலர் அச்சொற் களை அப்படியே தமிழ் எழுத்துக்களால் எழுதுகின்றனர். இங் ஙனம் பல ஆண்டுகள் சென்று விட்டால் ஆங்கிலமும் தமிழும் கலந்த ஒரு தனி நடையும், அதன்பின் மொழியும் தோன்றலாம் என்பது மொழியியலறிஞர் அறிந்ததே, ஆகவே தமிழ், ஆங்கிலம், வடமொழி இன்னும் ஏனைய மொழி வல்லுநர்களும் கொண்ட "கலைச் சொல்லாக்கக்குழு" ஒன்று அமைத்துத் தமிழை அணி செய்வது சாலச்சிறந்த பணியாகும் என்பது எனது தாழ்மையான எண்ணம்.

ஏனெனில், பல ஆங்கிலச் சொற்களுக்கு ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கருத்துக்கேற்ப தமிழில் பொருள் எழுதுகின்றனர். எதனை மேற்கொள்வதென்றும், எது சரியான சொல்லென்றும் பலர் அறிய இயலவில்லை, காட்டாக 'Train' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஒருவர் 'தொடர்வண்டி' என்றும், இன்னொருவர் 'புகைவண்டி' என்றும் தமிழில் எழுதுகின்றனர். இவற்றில் எதைக் கொள்ளுவது? எதைத்தள்ளுவது? பலர் அறியாது திகைக்கின்றனர். இஃதேபோன்று பல சொற்களுக்குப் பலவிதமாகப் பொருள் தமிழில் கொண்டு எழுதித் தடுமாறவேண்டியுளது. வடமொழிச் சொற்களுக்கும் ஒரு சொல்லுக்குப் பல வகையில் பொருள்கொண்டு எழுதுகின்றனர். 'பிரதிநிதி' என்னும் வட சொல்லுக்கு 'மாற்றாள்' எனச் சிலரும், 'பதிலி' எனச்சிலரும் மாறாட்டமாக எழுதுகின்றனர். எனவே அவரவர் நினைத்தாங்குப் பொருள் கொண்டு எழுதிக் கொண்டே வந்தால் நாளடைவில் மொழிவளர்ச்சி தடைப்படும். சொற்பொருள் குன்றிவிடும். மொழியின் தூய தன்மை சீர் கெடும்.

மேலும், பல பிறநாட்டுப் பொருள்கள் நம் நாட்டுக்கு வாணிகத்தின் வாயிலாக வரும்போது அவற்றின் பிறமொழிப் பெயர்களும் வருகின்றன. பொருள் தெரியாது அச் சொற்களை அப்படியே வழங்குகிறோம். காபி (Coffee), டீ (Tea), ரோசா (Rose) முதலியன அவற்றுச்சில. கலைச்சொல்லாக்கக் குழுவினர் இவற்றிற்குத் தக்க சொற்களை உண்டாக்கலாம்.

ஆங்கிலேயர் முருங்கைக்காயை 'Drum Stick' என்றும், வெண்டைக்காயை, 'Lady's finger' என்றும் தங்கள் மொழியில் ஆக்கிக்கொண்டுள்ளார்களன்றோ?

ஆதலின் தமிழ்பேரறிஞர்களும், பன்மொழிப் புலவர்களும் கொண்ட ஒரு கலைச் சொல்லாக்கக் குழு அமைத்து மேற்கூறிய வகைகளில் திருத்தங்கள் செய்யின் தமிழ்மொழி தன் தூய்மை கெடாது; பொருட் செறிவு குன்றாது; நாடோறும் வளம்பெறுதற்கிடமுண்டாம். தமிழில் போதிய சொற்கள் இல்லையென்று கூறுவோர்க்கு வாயடைப்புமாகும்.

இத் தமிழ்ப்பணியினைச் சென்னை மாநில அரசினர் மேற்கொள்ளல் மிக்க நலமாகும். இன்றேல் தமிழ் வளர்ச்சி விரும்பும் தமிழர் ஒருங்கு கூடி நன்கு சிந்தித்து ஆவன செய்து மொழி வளம் பெறப்பாடுபட வேண்டுமாய் மிகவும் தாழ்மையுடன் பணிந்து, தமிழறிஞர்களையும், தமிழன்பர்களையும, தமிழ்த் தாயின் முன்னேற்றம் விழையும் அனைவரையும், கேட்டுக் கொள்ளுகின்றேன்.

வாழிய செந்தமிழ்!

துன்ப நிலை.

வித்துவான் திரு. மு. சடகோபராமாநுசம் பிள்ளை அவர்கள்,
விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி.

(முற்றொடர்ச்சி, துணர் உ௯—மலர் ச பக்கம் 103.)

பாடம் சொல்லும் முறை.

இவர்கள் பாடம் சொல்லும் முறையே ஒரு தனிப்பட்டது. அதற்குக் காரணம்: புலவர் பயிற்சி மாணவர்கட்குப் பாடம் சொல்லும் முறையைப் பலகால் சொல்லி வந்ததேயெனக் கூறலாம். ஆத்திரேயன் பேராசிரியன் கூறிய பொதுப்பாயிர இலக்கணப்படி "வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பு" முதலாக எண்வகை யுறுப்பும் அமையப் பெற்றவர். கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை இயல்பிலே வாய்க்கப் பெற்றவர். விரையாது வெகுளாது விரும்பி முகமலர்ந்து கொள்வோன் கொள்வகை யறிந்து அவன் உளங்கொளக் கோட்டமின் மனத்தராய் மாணவர் குறிப்பறிந்து பாடம்சொல்லத் தக்கார். நுண் மாண் நுழைபுலம்மிக்க தம்மறிவால் நூலாசிரியர் உரையாசிரியரது கருத்தறிந்து கற்பிக்குமாற்றல்சால் அண்ணல். பாடம் சொல்வதில் தெளிவு விளக்கம் இரண்டும் திகழும். ஆங்கில மாணவரிற்சிலர் ஆராய்ச்சி யெனத்தாம் கருதிய சில வினாக்களை விடுப்பர். அவற்றிற்கு 'எடுத்தது கண்டிலர் இற்றது கேட்டார்' என்றாங்கு விடை, சிந்தியாது தெளிவாக வெளிவரும். கேள்விகேட்ட மாணவர் மூக்கிற்கரியராய்த் தலைகவிழ்வார்; ஆயினும் அவர்கள்பால் அன்புடையாராயிருப்பர். மாணவர்களும் இவர்கள்பால் பேரன்புடையாராய்ப் பேராசியரென உண்மையாக மதித்துப் பணிவோடு நடந்துகொள்வார்கள். ஒருசமயம் புகைவண்டியில் பல்கலைக்கழக மாணவர் ஒருவரை வேறொருபள்ளி ஆசிரியர்

ஒருவர் "யாரார் என்னென்ன பாடம் நடத்துகிறார்கள்" என வினவினர். அதற்கு அம்மாணவர் பலருடைய தகுதியையும் பாடம் சொல்கிற நூல்களைப்பற்றியும் கூறிவந்தார். கேட்டிருந்த ஆசிரியர் இடைமறித்து "பூவராகம் பிள்ளை எப்படி? என்றார். மாணவர், "அவரா? இலக்கணக் கடல், "அதிரதர் தம்மை யெண்ணில் அணிவிரல் மடக்கவொட்டா" என்றபடி சேனாவரையத்தில் ஒப்பாருமிக்காருமில்லார்" எனச் சிறப்பித்துக் கூறினர். இங்ஙனம் பல்வகையாலும் மாணவர் உள்ளத்தைக் கவரச்செய்து மாண்புற்ற பெரியார். அந்தோ! கூற்றுவன் கொடியனன்றோ.

சொற்பொழிவு.

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்

வேட்ப மொழிவதாம் சொல்—என்றாங்கு இவர்கள் சொற்பொழிவை நேரில் கேளாது பிறர் வாயிலாகக் கேள்விப்பட்டவரும் "இனிநாம் அவர்கள் பேச்சைக்கேட்க வேண்டுவது இன்றியமையாதது" என்று வியந்து கூறும் முறையில் பேசுவார்கள். இவர் சொற்பொழிவாற்றும் திறத்தில்ஆங்கிலப் பட்டதாரிகள், பாஷாகவி சேகரர் ரா. இராகவையங்கார், முதுபெரும் புலவர் பண்டிதமணி முதலாய தமிழ் நாட்டுப் பெருமக்களால் பாராட்டப் பெற்றவர். ஓரிடத்துப் பேசியபொருள் பிறிது ஓரிடத்து மறந்தும் வராது. புதுப்புது நயங்கள் காண்பார். மரபு தவறாது மாண்புறப்பேசி மக்கள் மனத்தைக் கவர்வார். பேச்சில் தெளிவு, நயம், இனிமை, பொருட்செறிவு முதலியன பரக்கக் காணலாம். இவர் பேச்சைக் கேட்போர் சித்திரப் பாவையின் அத்தக வடங்கியிருப்பர். பேச்சு, ஆரவாரமாக வெற்றெனத் தொடுத்திராது. இலக்கியம், சமயம் என்ற தலைப்பிலேயே யிருக்கும். சில இடங்களில் இரண்டும் இயைந்து நிற்கும்; அது பாலொடு தேன் கலந்த பான்மையது. இலக்கியம், இலக்கணம், சமயம் இவற்றை முன்னேற்பாடின்றியே பேசும் ஆற்றல் மிக்க அறிவுடைப்

பெருமகன். யாரும், எவ்வகையினும் சிறிதும் வருந்தா வகையில் பேசும் வள்ளல். மிக நீண்டநாழி பேசுவதை விரும்பார். கேட்போர் ' இன்னும் சிறிதுநேரம் பேசாரா'' என விரும்பும் வகையில் முடிப்பார். எந்தப் பேச்சாயினும் தாம் எடுத்துக்கொண்ட தலைப்புக் கேற்ற பகுதியைத் தமது சமயநூல், சமயநூலுக்குரிய பேருரை இவற்றி னின்றும் சில எடுத்துக் காட்டுகள் எடுத்துக் காட்டா திரார். எற்றுக்கோவெனின் "என்றென்றுந் தம் திட்ட தெய்வத்தை, நன்றென்றேத்திடல் ஞானிகள் சம்மத,, மாகலின் அம் முறையைக் கைப்பற்றிய கணக்காயர்.

இரண்டு இடங்களில் இவர்கள் பேசிய பேச்சு இன் னும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அவை வடமொழிமரபும் தென்மொழிமரபும், சரணுகதி என்பன. இவற்றுள் வடமொழி தென்மொழி—என்ற தலைப்பில் தமிழின் தெளிவு, பொருட்செறிவு, இனிமை முதலியவை களைப் பெரும்பாலும் சங்க இலக்கியங்கள், சிறிது சமய நூல்கள் இவற்றினின்றும் எடுத்து விவக்கினுர். சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தல் என்ற தென்மொழிமரபு, மிகை படக் கூறல் விளக்கமில்லாதிருத்தல் என்றவடமொழிமரபு இரண்டையும், தேசிகன் ' பொய்கைமுனி—மங்கையர் கோன் ஈருகவுள்ள ஆழ்வார்கள் மகிழ்ந்துபாடும் செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளிய வோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்ரேமே'' என்று கூறியபடி ஆழ்வார்கள் ஈரச்சொல்லால் இனிமையாக வெளிப்படுத்தினுர்.

வடமொழி துணைகொண்டு எழுதிய திருவாய்மொழி யின் ஈட்டுரை தனித்தமிழ் படித்தவர்கட்கு விளங்கா தென்பதொருதலை. அவ்வுரையைத் தமது இருமொழி யாற்றலால் எளிய முறையில் தமிழ்ப்படுத்தி வாஞெலியில் பல பேச்சுகள் பேசியிருக்கிருர்கள். அவற்றுள் ஒன்றை மட்டும் அன்பர்கள் கருத்துக்கு விருந்தாகக் கொண்டுவர விரும்புகின்றேன். அவை :

ஈட்டுரை :—“ இம் முதற்பாட்டில் ஆமிஷார்த்தமாக ஏகாக்ரசித்தமா யிருக்கிறதொரு நாரையைக் கண்டு தன்னைப்போலே எம்பெருமானாலே அபஹ்ருத சித்தையா யிருக்கிறதாகக் கொண்டு ஐயோ நீயும் இங்ஙனம் பட்டா யாகாதே என்கிறார் ” என்பது.

வானொலிப்பேச்சு :—“ கடற்கரைச் சோலையில் தலைவனைப் பிரிந்து வருந்திக்கொண்டிருக்குந் தலைவி, அங்கு இரையின் பொருட்டுஞ் சிறுமீன்களை விட்டுப் பெருமீன் வரவை எதிர்பார்த்திருக்கிற நாரை தன் கண்ணுக்குப் புலப்பட, அஃதிருக்கும் நிலையும் அதனுடம்பின் வெண்மையுங் கண்டு, அதுவும் தன்னைப்போல் தலைவனைப் பிரிந் திருப்பதாகக் கூறுவது இப்பாசுரம்.” என்பது.

இவ்வாறு அவ் வியாக்கியானத்தின் கருத்துக் கெடாமல் உய்த்துணர்ந்து தமது தெள்ளிய நடையில் அமைத்துள்ளார். இவை படித்து மகிழ்தற்குரியன.

சரணாகதி :—இத் தலைப்பில் அவர்கள்,

சரணா கதிமற்றோர் சாதனத்தைப் பற்றில்
அரணாகா தஞ்சனைதன் சேயை—முரணழியக்
கட்டியது வேறோர் கயிறுகொண் டார்ப்பதன்முன்
விட்ட படைபோல் விடும்.

என்ற மணவாள மாமுனிகள் கருத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு உலகியல் நடைமுறையில் வைத்துப் பலப்பல மேற்கோள்களோடு கேட்டோர் செவிக்குத் தேனென வார்த்தார்கள். இங்ஙனம் அமுதமாரியாகச் சொற்பெருக் காற்றி மக்களை மகிழ்வித்தார்கள். இதன் திறம் விரிப்பின் பெருகும். அந்தோ கூற்றுவன் அறியான் !

குணநலம்.

அடக்கம் அமரருள் உய்க்கும், 'எல்லார்க்கும் பணிதல் நன்றாம்' என்ற வாய்மொழியைத் தம் வாழ்க்கையில் அமைத்துக்காட்டிய அண்ணல். பலர் குழுமிய ஓரிடத்துத் தம்மை யொரு புலமையுடையவராகக் காட்டிக்கொள்ள வேண்டுமென்பதில் சிறிதும் விரும்பார். "கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன், குத்தொக்க சீர்த்த விடத்து" என்றபடி அமைதியாக விருந்து தமக்குச் சந்தர்ப்பம் நேரும்போது தன்னாற்றலைக் காட்டாதிரார். 'மறந்தும் பிறன்கேடு சூழற்க' என்றபடி நடந்துகொண்டார். தமக்குப்பல வசதிகளிருந்தும் எளிய வாழ்க்கையைக் கடைப்பிடித்தவர். பாடை யேறினும் ஏடது கைவிடேல் என்ற முதுமொழிக்கிணங்க இடைவிடாது படித்துக் கொண்டிருப்பார். இடைவிடாது படிக்கும் பண்பாடும்' கூர்த்த மதியும் உடைமையானே பனசையார் பரிசில் தொகை ஆயிரமும் இவர்களைச் சென்றடைந்து பயன் பட்டது. அதனை மூலதனமாகக் கொண்டு மேலும் பெருக்கி நன்செய் நிலம் வாங்கினார்கள். தனித் தமிழுக் காக வைத்த அப் பரிசிலை முதலாவதாகப் பெற்றவர் தனித் தமிழனாகிய இவரேயாவர். அடங்கலர்க் கீந்த தான மாகாது அடங்கிய இவர்க்கீந்த தான மாகையால் அப் பரிசில் இவர்கள்பால் சென்று பெருமைபெற்றது. அப் பரிசிலின் மதிப்பு காதத்தோர் அளவாகக் கேளாது அடுக் கிய பலவுலகு அளவாகப் பரவியது. இவர்கள் இப் பரிசில் பெற்றவுடன் கரந்தைக் கவியரசு திரு. அரங்க. வேங்கடாசலம் பிள்ளை அவர்களை அழைத்துக்கொண்டு பனசைக்குச் சென்றார். அப்பொழுது பட்டத்திருந்தவர் ஸ்ரீலஸ்ரீ சாமிநாத தேசிகர். அவர் இவர்களை வரவேற்றுத் தக்க முறையில் மதிப்புக்கொடுத்து உபசரித்தார். இவர்களைக் கொண்டு கந்தபுராணத்தைப் பதிப்பிக்க வேண்டுமென்ற நோக்கங் கொண்ட அவர், கந்தபுராணமும் கொடுத்து வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கையாதலான் முறைதவறாது

வரிசையும் செய்து பலமணிநேரம் மகிழ்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்து வழியனுப்பினர். இவர்கள் நண்பர்களோடும் ஏனையோரோடும் பேசும்போது விளையாட்டாகவும், நயமாகவும் பேசுவார்கள். இவர்கள் குணநலம் மிகப் பலவாம். இவர்கள் பேச்சிலீடுபட்டுக் குணநலனை நண்குணர்ந்த அறநிலைய பாதுகாப்பு அமைச்சர் திருமிகு. K. வேங்கடசாமி நாயுடு அவர்கள், 1933-ம் ஆண்டிலிருந்து சென்னை வைணவ மாநாட்டில் கலந்து கொள்ளும்படிச் செய்தனர். அங்ஙனமே கலந்து அம்மாநாட்டைத் தம் சொற்பொழிவால் அலங்கரித்து வந்தார்மன்.

இங்ஙனம் இவர்கள் வாழ்க்கை வரலாறு விரிப்பின் பெருகுமாகலின் மிகச் சுருங்கிய முறையில் சிறிதளவு எழுதப்பெற்றது. நடையினின் றுயர்ந்து நன்முறைக் கடைப்பிடித்தவராதலின் இவர்கள் வாழ்க்கையின் நடைமுறையிலிருந்து நாம் கைக்கொள்ள வேண்டியவை பல. அவை ஒரு தனி நூலாக வெளிவரல் வேண்டும். வெளிவரும் நாளை நாமெல்லோரும் எதிர்பார்ப்போமாக.

★ பரத சாத்திரம். ★

இந் நூல் நாட்டியம் பழகுபவர்கட்கும், பழக்குபவர்கட்கும் இன்றியமையாத சிறந்த அரிய நூலாகும். 182 பாக்கள் கொண்டது. பாவ வியல், இராக வியல், தாள வியல், ஓழிபியல் என நான்கு இயல்களும், தெளிவுரையும், அடிக்குறிப்பும் உள்ளன.

விலை ரூ 1—8—0

(அஞ்சற் செலவு வேறு.)

பாவைப் பாவினியல்பு.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

(முற்றொடர்ச்சி: துணர் உகூ—மலர் ரு—பக்கம் 121.)

பின் இரு மடநல்லார் உடன்வர, மங்கையர்க்கரசி மற்றொரு இல்லகஞ்சென்று 'முத்தன்ன பற்களை யுடையரளே! நென்னல்வரை எங்களுக்கு முன்னாக எழுந்துவந்து எம்பெருமான் எனக்கு அத்தன், ஆனந்தன், அமுதன் என்று வாயூறி அவனது திருவடிப் புகழையே பேசுவாய்! இன்று இவண் வந்து பன்முறை உன்னை அழைக்க இன்னும் உன்வாயிற் கதவைத் திறந்திலாய்' எனக்கூற, சிவபெருமானைத் தொழுதெழுவாள், 'நீங்கள் ஈசனிடத்தில் பற்றுடையீர்! மற்றும் பழைய அடியார்கள். மிக்க உரிமையுடையீர்! ஆதலானே புத்தடியேங்களது மலந்தெடுத்து ஆட்கொண்டு அருளுவது இழிவாகுமா?' என்றாள். அதற்கு விடைமுகத்தால் வெளியில் நின்றவர்கள் 'நின்னன் புடைமை நாங்கள் அறியாமோ? மாசற்ற மனமுடையார் மாதொரு பாகனைப் பாடமாட்டாரோ! அது எவ்வாற்றாகினும் நின்னைத் துயிலெழுப்பவந்த எங்களுக்கு இவ்வளவும் வேண்டும்! இஃதோடமையாது இன்னும் வேண்டும் எனத் தங்களையே குறைத்துக்கூற, அம்மாதும் துயிலொழிந்து புறமே வந்தார்.

அந் நால்வரும் பிறிதொரு இல்லஞ்சென்று, ஆங்கு துயிலும் மாதினை எழுப்ப 'ஒளியுடைய நித்தில நகையாய்! நினக்கு இன்னும் பொழுது புலரவில்லையோ! எனக்கூற, துயிலொழிந்தமாது 'சுகந்தரு சுகமன்ன அழகியார்கள் யாவரும் வந்தனரோ?' என்று வினவ, இல்லின் கடைவாயில் நின்றவர்கள், 'யாங்கள் வந்தவர்களைக் கணக்கிட்டு உண்மையினைப் பின் புகல்கின்றோம். அதுவரை நீ துயிலுற்று காலத்தை அவமே போக்காதே. விண்ணுக்கொரு மருந்தாய் நின்று, மறையின் விழுப்பொருளாய் விளங்கி கண்ணிற்கு

இனியராகிய கருணை வள்ளலைப் பாடிக் கசிந்து உள்ளம் உள்ளே நெகிழஉருகா நின்றோம்! நீயே இவண் வந்து பாவை நோன்பு நோற்கவந்த பாவையர்களெல்லோரையும் கணக்கிட்டு எண்ணுக. நின்குறிப்பின்படி, எண்ணிக்கை குறைந்தால், நீயும் துயில் ஏற்பாயாக' என, அம்மாதும் துயில் நீத்து வெளியே வந்தனர்.

ஐவருமாக மற்றொரு இல்லகத்திற்குச் சென்று, 'கருமாலும் பிரமனும் காணாத இறைவனை நாமே அறிவோம் என குறும்புபட விளையாட்டாக பொய்மையினை உரைக்கின்றவளே! துயில்நீங்கிக் கதவைத்திற! இந்நிலவுலகினர், வானுலகினர், பிறவுலகினராகிய யாவரானும் அறிவதற்கரிய பிரானது அருவத் தன்மையினையும், ஒன்றிற்கும் பற்றா நம்மை உய்ய ஆட்கொண்டு கோதாட்டும் அவனது உருவத்தையும் வாயார வாழ்த்தி, இறைவனது அருவுருவ நிலையினையும், சீலத்தினையும் கோலத்தினையும் எண்ணிச் சிவனே! சிவனே! என ஓலமிட்டு அலறினும் நீயே துயிலெழுந்த பாடுமில்லை! நின்னியல்புதான் என்னே! என, அம்மாதும் துயில் ஒழிந்து வந்தனள்.

அறுவரும் பிறிதொரு மனைக்குச் சென்று 'மானன்ன மருண்ட நோக்கை மானும் நெடுவிழியினையுடையாளே! இன்னும் பொழுது புலரவில்லையோ! 'உங்களை நானே வந்து காலைக்கு எழுப்புவேன்' எனக்கூறிய சொல்லும் நாணமின்றி எத்திசைக்கண்ணுற்றது விண்ணுளோரும் மண்ணுளோரும் பிறரும் அறிதற்கரிய பெம்மான் கருணையினால் தானே எளிய வந்து எங்கள்பால் தலையளி செய்து ஆட்கொண்டருளும் அவனது திருவடிகளை வாழ்த்தி வந்தோமாகிய எங்கட்கும் வாயிலைத் திறந்தாயில்லை! பாட்டுக்கு உருகாத பரிசும் உனக்கே உற்றதாம்! எமக்கும் பிறர்க்குமுரிய இறைவனை நீயே பாடுக' என்ற அளவில், அம்மாதும் துயில் நீத்து வெளிவந்தனள்.

பின்னர் எழுவரும் மற்றோர் மனையகஞ் சென்று 'அன்னையே! இவ்வணம் பொழுது போவதும் சிலவாமோ!

பல அமரர்க்கும் அரியவனும் ஒப்பற்ற பெரும் புகழையு முடைய சிவனது திருச் சின்னமாகிய சங்கு முதலியவற்றின் ஒலிகேட்ப 'சிவ, சிவ' என வாய் திறப்பாய்! தென்னுடைய சிவனே யெனுமுன்னர் தீயை யணுகிய மெழுகுபோல் உருகுவாய். ஆனால் இவ்வைகறைப்போதில் யாங்கள், என் தலைவன், அரசன், இன்னமுதன் என தனித் தனியே கூறுகின்றும் இன்னும் துயில் கின்றனையே! கல் நெஞ்சுடைய அறிவிலிபோல் கொன்னே கிடக்கின்றாய்! நின் தூக்கத்தின் தன்மைதான் எத்தகையது சொல்! என்றவுடன் அம்மாதும் துயிலெழுந்து வந்தனள்,

எண்மரும் ஒருங்குகூடி இறுதியாக மற்றொரு மனையகத்தேசென்று 'கோழிகள் கூவ, ஏனைப்பறவைகள் எங்கணும் ஒலிக்கின்றன. ஏழிசையும் இயம்பப்பெற, சங்கங்கள் எங்கும் ஒலிக்கப் பெறுகின்றன. ஒப்பற்ற ஒளி யுருவினனும் பேரருள் வடிவினனுமான பெருமானை யாம் பாடினோம். நீ கேட்டிலையோ? ஈது என்ன உறக்கம்! கதவைத் திறவாய்! இறைமாட்டு அன்பு செய்யும் உனது நெறியும் சார்புடைமையும் இவ்வளவுதானா! இனியாவது ஊழி முதல்வனாய் நிற்கின்ற முதல்வனும் உமையொரு பாகனுமாகிய ஒருவனைப் பாடுவாயாக! நீ வாழ்க' என்றிசைத்த அளவில் அம் மாதும் துயிலொழிந்து புறமே வந்தனள்.

மங்கையர் ஒன்பதின்மரும் ஒருங்குகூடி 'முன்னை பழமைப் பொருளுக்கும் முன்னாகி, ப ழம் பொருளாயுள்ளானே! பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப் பெற்றிமையுமுடையோனே! உன்னைத் தலைவனாகப் பெற்ற நின் சீரடியார்களாய யாங்கள் உன்னடியவர் திருவடியினை வணங்குவோம். அவ்வடியவர்கட்கே அன்புரிமை யுடையவர்களாவோம். அன்னவர்களே எம் தலைவர்களுமாவார்கள். அவர்கள் உவந்து புகன்றதை பணிவொடு பரிந்து புரிவோம். இவ்வாறாகிய எங்கள் கருத்து என்றென்றும் நிலைத்திருக்கும்படி நீயே அருள்புரியின், எம்பெருமானே! யாங்கள் ஒருகுறையு

மிலாதவர்களாவோம்!' என மொழிந்து இறைவணக்கம் நிகழ்த்த முற்பட்டனர்.

இவ்வணம் இறைபணி புரிய முற்பட்டார், திருவருளா லன்றிப் பிறவி மாயுமாறில்லை யெனத் தன்னுளே தேறினர். சிவபத்தியும், சிவஞானமும் பிறவியினையறுக்க வல்லனவாத லான், இறைவனடியைப் பற்றின் பேரின்பப் பேறுவாய்த்தலைக் கருதி, இறைவனது மாண்பினைப் பின் வருமாறே பரவுவாரா யினர். 'பாதாளம் ஏழினுக்கும் கீழ் இங்குற்றதுதான் எனச் சொல்லவொண்ணாதபடி உள்ளது, அவனது பாதப்போது. போதார் அவன் திருமுடியும் எல்லாப்பொருளுக்கும் முடிவா யுள்ளது. உயிர்களுக்கு அருளும்வண்ணம் மங்கை பங்க னாய்த் திகழ்கிறான். கருதுவார் கருதுவதற்கேற்ப திருமேனி பல உடையவன். மறைகளும், விண்ணுளோரும் மண்ணு ளோரும் எத்தகைய அளவு புகழினும் செம்மைபெற்ற அடிய வர் தம்மை விட்டகலா ஒப்பற்ற தோழன். இத்தகைய தோழமையோடும் தொண்டருள்ளத்தே என்றும் நிலைத் திருக்கும் விமலன். இன்ன பான்மையாய பரனது திருக் கோயிலின்கண் வழிபடும் மலமாசுகளில்லா நற்குலப் பெண் மணிகளே! அத்தகைய நின்மலனுடைய ஊர் யாது? பெயர் யாது? உற்றவர் யாவர்? அயலார் யாவர்? அவனது மெய்ப் பொருள் சேர்ந்த புகழினைப் பாடிப்பொருந்தினர் மாட்டுள்ள பரிசுதான் யாது?

படர்க்கையில் அன்புநெறியில் பரவி, வீட்டு நுகர்ச்சி யில் அமைந்து நின்ற பாவையார், பொய்கையில் பூம் புனல் பாய்ந்து இறைவனை நோக்கி காப்பு கூறுவாராயினர். ஐயனே! காணற்கரிய தழல்போன்ற நிறமுடையவனே! தழலின்கண் நீறுபூத்தன்ன வெண்ணீறு பூசியவனே! செல் வனே! சிறிய இடையையும் மையுண்ட அகன்ற கண்களு முடைய உமையாள் கணவா! எங்கள் தலைவா! பொய்கையில் மூழ்கி முகேரென்ன ஒலியெழ நீரைக் கையினால் குடைந்து நினது எழிலார் கழலினைப்பாடி உனதுவழி நின்று புகழும் அடியார்களாய யாங்கள் பெருவாழ்வு பெற்றோம்! இழிதகை

மையாய உயிர்களை, நீ கழிபெருங் கருணை மேலீட்டால் ஆட் கொண்டு மலங்களைப் போக்கி யருளும் திருவிளையாட்டினால் யாங்கள், படிப்படியாக சரியை முதலாய நால்வகை வழிகளின் விதிப்படி முறையாக நின்று, உய்திகூடி மலங்களை அகற்றி னோம்! ஆதலானே, மீண்டும் அவை எங்கள்பால் பொருந்தா மலும் யாங்களும் வழுவாதிருக்கவும், நினது திருவடிப்பேற் றினை நல்கிக் காப்பாய்!

இவ்வாறு வீடாட்சிபெற காப்பு வேண்டி நின்று பின் மலமாசு நீங்க, நீராடுவார் இறைவனது பொன்னடிகளைக் காணவிரும்பி துதிப்பாராயினர். நம்மை இறுகக் கட்டிய பிறவிப்பிணி அடியோடு இந் நீராடலால் நீங்க, நாம் மகிழ்ந்து விளையாடத் தருந்த நறுநீரையுடைய அருளாளனும், தில்லைச் சிற்றம்பலத்தே சோதியாய் நின்று ஆடுவோனும், விண்ணுல கத்தையும் மண்ணுலகத்தையும், மக்களையும் முயற்சியிலாது படைத்தும், காத்தும், கரந்தும் விளையாடுவோனுமாகிய எம் மிறைவனது பொருள்சேர் புகழையும் திருநாமத்தையும் பாராட்டிக்கொண்டே, நமது கைவளையல்கள் குலுங்கவும், மேகலைகளாகிய அணிகள் முழங்கவும், கூந்தல் நீரில் தோய்த லான், அக் கூந்தலில் உள்ள தும்பிகள் எழுந்து ரீங்காரம் செய்யவும், பூத்திகழும் பொய்கை நீரைத் தீது போகக் குடைந்து, நம்மை உடைமையாகக் கொண்டவனது பொற் பாதங்களைப் புகழ்ந்து சுனை நீராடலைச் செய்வோம்!

நீரில் இன் சுவையாய் நிகழ்ந்தோனை நினைந்தாடும் பாவையார், இன்பத்தை அளிக்கும் இறையன்பை உள்ளத் தில் அடைத்து, பொய்கையை சத்தியும் சிவமுமாகக் கொண்டு, சித்த சுத்தியும் சேதன வளர்ச்சியும் பெறுமாறு நீராடல் வேண்டுமென்று நியதி வகுத்து பின் வருமாறு கற்பனைதோயகூறி யாடுவாராயினர். குவளையும் செங் கமலமும், குருகும் குருகினத்தின் ஒலியும் மும் மலங் கழுவுவாரும் சார்ந்து நிற்கும் பொய்கையாய மடுவு, கருங் குவளைபோன்ற கண்ணையும், செந்தாமரை போன்ற முகத்

தையும், அழகிய வளையல்களையும் வண்டோசை நிறைந்த பூமாலையையு முடைய எம்பிராட்டியும், கருங்குவளை போன்ற கண்டத்தையும், செங்கமலம்போன்ற திருவடியையும், அங்கம் ஒன்றுபட நெருங்கி அணியாக கொக்கின் இறகுகள் போன்று பின்னிக்கொண்டிருக்கும் பாம்புகளையுமுடைய எம்பிரானும் போன்றிசைந்துள்ளது. மற்றும் இம் மடுவு, கருங்குவளைபோன்ற கண்ணால் நோக்கி, செந்தாமரை போன்ற திருவடியை தம்மைச் சார்வாரது, தலையில் பொறித்து, குருகினம் அரவம் போன்றுத் திகழும் இனிய வாக்கால், தம்மிடம் வந்துற்றோரது மும்மலங்களைப் போக்குவதால், அருட் சத்தியோடு பொருந்தி யிருக்கும் சிவ னெம்பிரானை ஒத்து விளங்குகின்றது. இத்தகைய மடுவில் இறங்கி, சங்கு வளையல் களோடு காற்சிலம்புகள் கலந்து ஒலிக்கவும், நெல்லுக்கு கொங்கு (உமி) போன்ற உயிருக் குரிய ஊனுடல், இறையன் பின் மிகுதியால் பூரித்துப் பொங்கவும், நாம் இம் மடுவில் நீர்குடைந்து பாடி விளையாடுவதால், நீர் பொங்கியெழவும், இத் தாமரைத் தடாகத்தில் நீராடுவோமாக

(இ—வ.)

★ பரத சாத்திரம். ★

—o—

இந் நூல் நாட்டியம் பழகுபவர்கட்கும், பழக்குபவர் கட்கும் இன்றியமையாத சிறந்த அரிய நூலாகும். 182 பாக்கள் கொண்டது. பாவ வியல், இராக வியல், தாள வியல், ஒழிபியல் என நான்கு இயல் களும், தெளிவுரையும், அடிக்குறிப்பும் உள்ளன.

விலை ரூ 1—8—0

(அஞ்சற் செலவு வேறு.)

வாதாபி வெற்றி நாள்.

புலவர், நா. நல்லொளியன், மெய்கண்டான் நிலையம். கழார்.

(முற்றொடர்ச்சி, துணர் உகூ—மலர் ரு பக்கம் 115.)

வெற்றியுற்ற படைத்தலைவன் அந்நாட்டிலிருந்து பல அணிகள், தானைகள், படைக்கலங்கள், பலசெல்வங்கள், பலசிறந்த சிலைகள் முதலியவற்றைக் கொண்டு வந்து நரசிம்ம பல்லவனுக்குக் காணிக்கையாகச் செலுத்தினான் என்பதனை,

" மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாபித்
தொன்னகரம், துகளாகத் துனைநெடுங்கை வரையுகைத்தும்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார். §

என்று பெரியபுராணம் என்னும் நூல் கூறுகின்றதால் அறியலாம். அதையே பிற்காலக் கல்வெட்டுகளும் பல பாடல்களும் புகல்கின்றன. இசைக்கடலாகிய தியாகய்யர் அவர்கள் விநாயக வணக்கப்பாடலில் 'வாதாபி கணபதிம் பஜே பஜே' என்று கூறுவதாலும் சென்ற நூற்றாண்டு வரை வாதாபியிலிருந்தே விநாயகர் கொண்டுவரப்பெற்றார் என்ற கருத்து நிலவி வந்துள்ள தென்பதற்குப் போதிய சான்றாகும்.

படைத்தலைவர் பரஞ்சோதியே மராத்தியர் வழிபட்ட விநாயகர் வடிவங்களைக் கொண்டுவந்து திருவாரூர், திருச்செங்காட்டாங்குடி, வலிவலம் முதலாகிய ஐந்திடங்களில் எழுந்தருளுவித்தார். இதனை அவற்றின் பீடத்தடியில் வரைந்திருக்கும் கல்வெட்டுகளே தக்க சான்றுபகரும்.

அந்நாளில் வாழ்ந்த திருஞானசம்பந்த நாயனாரும் அஞ்ஞான்று வழங்கிவந்த புராணக்கதையையே

"பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர யருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை மிறையே"

என்று தம்பாடலிற் கூறியுள்ளார். ஆதலால் 'நாயன்மார் காலம் எனப்படும் ஆறும் நூற்றாண்டிற்கும் எட்டாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்திற்றான் விநாயக வணக்கமும், கோயில்களும், வடிவங்களும் பெருகி நிலவுவ

தாயிற்று' என்று வரலாறு, கல்வெட்டு முதலியவற்றை நன்கு ஆராய்ந்த திரு. வி. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் செந்தமிழ்ச் செல்வியில் வரைந்துள்ளார்கள்.

§. சிறுத்தொண்டர் புராணம் பா. 6.
*. தியாகராசலீலை கடவுள் வாழ்த்து பா. 29

ஆதலால், வாதாபியை வெற்றிபெற்ற நாளை நாட்டில் எல்லா மக்களும் கொண்டாடினார்கள். வீண் பேராசை கொண்ட புலிகேசியை வென்று தங்களை அடிமைப்படுத்த எண்ணிய எண்ணத்தை எதிர்த்து அடிமையாகாது காத்துக்கொண்ட தமிழர்களின் தன்மானப் போரின் வெற்றி விழாவாக இது பல ஆண்டுகள் மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்தது. அன்று அப்போர் நடக்க வேண்டிய நிலைமையையும் போரின் வெற்றிச்சிறப்பையும் அதனால் தமிழர்க்கு ஏற்பட்ட பெருமையையும் எடுத்துத் தான் மொழிந்திருப்பார்கள்.

ஆரியர்களின் தென்னாட்டு வருகை முதிர்ந்த பிற் காலத்தில் அதை மறைத்துப் புனைகதைகள் கட்டி அவ் விழாவின் பெயரையும் மாற்றிப் பிற்காலத்திற் புராணங் களில் எழுதியும் வழக்கிலுங் கொண்டுவந்து விட்டனர். முதன் முதலில் வேற்று நாட்டுக் கதைகளைக் கேட்பதில் யாவரும் கருத்துச் செலுத்துதல் மக்களின் இயற்கையே யாகும். ஆனால், அது இந்நாட்டில் அக்கதைகளை நம்பி அதிலேயே மக்களை ஈர்க்குமாறு மதப்பிரசாரம் முதலிய வற்றால் மக்கள் மனத்தை சிதறவடித்து விட்டதால் மக்கள் அதை உண்மையெனக் கருதிப் பண்டைய வரலாற்று முறையையும் மறந்து விநாயகரை வழிபடு முறையில் மாறிவிட்டது.

தமிழர்களே! இனியாகிலும் இவ்விழாவின் உண்மையினை உணருங்கள். பரஞ்சோதி படையெடுத்தது முது வேனிற்கால மாதலாலும் வாதாபி வீழ்ச்சியுற்றதை மறவாமலிருக்கவும் பரஞ்சோதி வெற்றித்தூண் நாட்டிய ஆவணி, வளர்பிறை சதுர்த்தியில் படைஞர் விநாயகர் வடிவங்களை சேகரித்ததற்கு அஞ்சி அவ் வடிவங்களைக் குளத்திலும், மாடங்களிலும் வைத்து மறைப்பாராயினர். அதை பிறகு அவ்வாதாபி வெற்றி விழாவுடன் இணைத்து விநாயக வடிவங்களை குளத்திலெறிந்தும், மாடங்களில் வைத்து மெழுகியும் மறைத்து வருகின்றனர். அதே நிலை

(158 ஆம் பக்கம் பார்க்க)

குண்டலகேசி வெண்பா.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

போதி நிழலுற்ற புத்தன் மலரடியாம்
சோதிநிலை யென்றும் தோன்றவே—ஆதிநிலை
கண்டகல் குண்டலகேசி யவள் காதையை
விண்டிட வுண்ணேக்கு விதி. 1

கருணை முகமும் கரியநிறக் கண்ணும்
அருளுடை நெஞ்சத் தழகும்—அருஞ்சொல்
உடையான் தனக்கென வோர்பற்று மில்லான்
அடைவார்க்குத் தாளளிப்பா னன்றே. 2

பெருமை பெருக நினைத்து பேரறிவு
வருங்காறும் நன்றின் வழியே—அருங்குணத்தை
நாடி யுலகில் நாதன்றான் ஒன்றே
தேடி நின்றானெனத் தேர். 3

சீர்பெருகுந் தாமரையும் கோங்குமிழ் செங்காந்தள்
நீர்பெருகுங் காவி நிலையுறலால்—பேர்கொள்
திருநகரே நல்லதோர் செந்தமிழ் நாட்டிற்கே
ஒரு முகமா மென்றுணர். 4

செந்தமிழ் நிறைந்து திகழு நன்னாடதனில்
நந்துபுகழ் நாடுமத் திருநகரை—அந்தமிகு
நெற்பலவோங்கிப் பொன் நீடு சிறத்தலாற்
கற்றவருண்ணா ரென்பர் காண். 5

இல்லார்க்கு வேண்டுவன ஈயுமே தொன்மையுள
நல்லார்க்கு நீள்புகழை நாட்டுமே—எல்லாப்
பெருங்குடியும் வாழ்விற் பெருகித் தழைக்கவே
பொருளளித்துப் போற்றும் நகர். 6

மதிகொள் களங்கமும் மாமனதிற் கொள்ளா
நிதியுடையார் வாழுமக் நீண்ட—கதிர்கொள்
திருநகரிலுள்ளோர் சிறந்த வொழுக் கோடு
அருள் ததும்பும் பேரறிவினர். 7

கற்புமிகு காதலியை கவினுறவே கலந்து
பொற்புவழா வில்லம் புரிவோரால்—சொற்றிறம்
மாறிடா மாண்பொடு வாழ்க்கைசெயும் மாண்பவரை
சாரக்கொள் நகரிதுவே தான். 8

அங்கரின் சோலை அருங்கொன்றையுங் காந்தள்
பொன்மலரும் செம்மலரும் பொற்புடனே—வண்டொலிக்க
பூத்தலை பாவலர்க்கு ஈவதெனப் பூமகளே
காத்துநின்ற பொன்மணியாம் காண். 9

தீவினையில் நல்லறத் தான்செல்வ மதையேயொக்க
காவின்மரம் பூத்துமிகக் காட்டினவே—ஆவலொடு
அம்மலர்த் தேனை வண்டுண்டியுணல் சொந்தமிலான்
செம்மையொடு கொள்வதெனத் தேர். 10

(தொடரும்)

(156 ஆம் பக்கத் தொடர்ச்சி.)

யினை இன்றும் இவண் செய்து வருதல் எவ்வளவு அச்சம் மக்கள் உள்ளத்தைப் பற்றியிருக்கிறது என்பதை வெளிப் படுத்துகிறது.

ஆதலால் தண்டமிழ்ப் பெருமக்களே! இவ் விழாவின் உண்மையினை யுணர்வதால் விநாயகர் பிறப்பாகக் கருதா மல் வாதாபி வெற்றி நாளாகக் கருதிக் கொண்டாடுக. அவ் வெற்றிநாள் கொண்டாடுங்கால் தமிழர் தன்மான வுணர்ச் சியால் எவ்வாறு அடிமையாகாது காத்துக்கொண்டனர் என்றும் மாற்றுரை வென்றமுறை யீதென்பதைப் பற்றி யும் இன்றைக்கு யாதுசெயல் வேண்டும்? என்பதைப் பற்றியும் தமழர்களின் கடமைகளைப் பற்றியும் கனிவுரை நிகழ்த்துமாறும் கேட்டுக் கொள்ளுகின்றேன். அப் பொழுதுதான் தமிழரின் உண்மையான பெருமையையும் உரிமையையும் கடமையையும் எளிய மக்களும் இனிதி னுணர வியலும்.

இதுகாறுங் கூறியவாற்றுன் விநாயகர் வழிபாடு பண் டைத் தமிழகத்தின் றென்பதும் அது பரஞ்சோதியாரால் ஏழாம் நூற்றுண்டுமுதல் தமிழர்க்கு அறிமுகப்படுத்தப் பட்ட தென்பதும், வாதாபி வெற்றி பற்றிச் சொற்பொழி வுடன் வெற்றித் திருநாளாகவே கொண்டாடப் பட்ட தென்பதும் உண்மையை உணர்ந்து தமிழர்கள் ஆவணி சதுர்த்தியை வாதாபி வெற்றி நாளாகக் கொண்டாடி சொற்பெருக்கால் தன்மானத்தொடு வாழ்வெய்த உதவ அறிஞர் முனைதல் வேண்டும் என்பதும் கூறப்பெற்ற தாகும்.

செய்யுள் இலக்கணம்.

வித்துவான் திரு. ச. பாலசுந்தரம், அவர்கள்,
விரிவுரையாளர், கரந்தைப் புலவர் கல்லூரி.

பாயிரம்.

1. மலர்தலை யுலகிற் பலகலை யுணர்த்திய
ஆசா னிணையடி அன்பொடு பரவிச்
செய்யுள் இலக்கணம் செப்புவன் நன்கே.

[செய்யுள் இன்னதென்பது]

2. செய்யுள் தானே,
அறமுதல் நான்கினும் நெறிபெற விளங்கி
எழுத்தசை சீர்தளை அடிதொடை எனுமா
றுறுப்பொடும் பொருந்திப் பாவே பாவினம்
எனவிரு பாற்றாய் அணிபெற வியலும்.

1. எழுத்தியல்.

[எழுத்தின்னதென்பதும் அதன் வகையும்]

3. மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.

[அசைக்குறுப்பாம் எழுத்துக்கள்]

4. அவற்றுள்.
குறில்நெடில் உயிருறுப் புயிர்மெய் ஆய்தம்
குறுகியல் இஉ ஐயீ ரளபெடை
எனும்பதி னொன்றும் அசைக்குறுப் பென்ப.

[சிலவற்றிற்குச் சிறப்புவிதி]

5. ஆவியோ டுயிர்மெய் அலகிடப் பெறுமே.

6. தனிநிலை அலகொடு தழுவலு முரித்தே.

7. எழுத்தல் ஓசையும் இயையும் ஓரோவழி.

8. சிதையிற் சேர்தலை சிறியஇ உவ்வோ
டுயிரள பெடையும் இயலா அலகுஐக்
குற்றுயிர் இயல்பினைக் கொள்ளும் என்ப.

2. அசையியல்.

[அசையின்னதென்பதும் அதன் வகையும்.]

9. எழுமொலி யளவாய் எழுத்தினி லியன்றுங்.
கொழுகிய சீருறுப் பாமசை யதுநேர்
நிரையென இரண்டாய் இயம்புவர் புலவர்.

[ஈராசையும் ஆமாறு]

10. நெடில்குறில் தனித்துமொற் றடுத்தும் நேர்நால்
வகையாம், குறிலிணை குறிநெடில் தனித்துமொற்
றடுத்தும் நிரைநால் வகையாம் என்ப.

[சிறப்பு விதி]

11. மொழிமுதற் றனிக்குறில் முறையின்விட் டிசைப்
நேரசை யாம்நெடில் அளபெழின் நேர்நேர் [பின்
குறிலொடு கூடின் கூறிய நிரைநேர்
ஒற்றள பாய்விடின் ஓரசை யாமவை
முன்னும் பின்னும் முயங்குத லிலவே.

3. சீரியல்.

[சீர் இன்னதென்பதும் அதன்வகையும் விரியும்]

12. அடிக்குறுப் பாஞ்சீர் அசையின் னுகும்
ஐவகை யாமதன் விரிமுப் பஃதே.

[பெயரும் உரிமையும்]

13. ஈரசை நாற்சீர் அகவற்குரிய.

14. மூவசை எட்டுள் நேரிறு நான்கும்.
வெள்ளை மற்றவை வஞ்சிக்குரிய.

15. ஒள்ளிய நாலாசைச் சீர்பதி னறும்.
வெள்ளையுள் வாராப் பொதுச்சீர் என்ப.

16. நேர்நிரை இரண்டும் சீர்நிலை அருகும்.

[வாய்பாடுகள்]

17. தேமா புளிமா கருவிளம் கூவிளம்
அகவற் குரிய அந்தங் காய்பெறின்
வெள்ளைக் குரிய கனிபெறின் வஞ்சி
தண்பூ நறும்பூ தண்ணிழல் நறுநிழல்
பெறினவை பொதுச்சீர் நாள்மலர் அசைச்சீர்க்
குரியவாய் பாடென உரைத்தனர் புலவர்.

4. தளையியல்.

[தளையின்னதென்பதும் அதன் விரியும்]

18 நிலைச்சீ ரிறுதியும் வருசீர் முதலும்
தலைப்பெயல் தளையஃ தேழென மொழிப.

[தளைவருமாறும் அவற்றின் பெயரும்.]

19. இயர்சீர் இயைதல் ஆசிரி யத்தளை
அச்சீர் முரணல் இயற்சீர் வெண்டளை
அசைச்சீர் இவ்வியல் ஆகும் என்ப.

20. வெண்சீர் ஒன்றுதல் வெண்டளை மறுதலைக்
கலித்தளை பூச்சீர் கலக்குமிவ் வியல்பே.

21. கனிச்சீர் ஒன்றினும் மாறினும் வஞ்சித்
தளையாம் நிழற்சீர் இவ்வியல் பெறுமே.

5. அடியியல்.

[அடியின்னதென்பதும் அதன் வகையும்]

22. தொடையுறுப் பாகச் சீரினி னியறல்
அடியின் இயல்பஃ தைவகைத் தாகும்.

[பெயரும் அவைவருமாறும்]

23. இருசீர் முச்சீர் குறள்சிந் தடியே
நாற்சீர் ஐஞ்சீர் அளவொடு நெடிலே
ஐஞ்சீ ரிகத்தல் கழிநெடி லென்ப.

[பாக்களுக்குரிய அடிகளின் சிறுமை பெருமை]

24. வெள்ளைக் கிரண்டடி கலிக்கீ ரிரண்டாம்
அகவலொடு வஞ்சிக் கடிமூன் றிழிபே,
உரைப்போர் கருத்தள வுயர்வெனப் படுமே.

6. தொடையியல்.

[தொடையின்னதென்பதும், வகையும் விரியும்]

25. அடியுட னடியைத் தொடுத்தலும் அழகுற
அடியினிற் சீரினை அமைத்தலும் முறையே
தொடையும் தொடையின் விகற்புமா மவை
எட்டுடன் ஏழைந் தாகிநன் கியலும்.

[தொடைகளின் இயல்பு]

26. முதலெழுத் தியையின் மோனை அடிதோ
றீற்றெழுத் தியைபிரண் டெதுகை நெறியின்
மொழியும் பொருளும் முரணுதல் முரணடி
அளபெழின் அளபெடை அந்தம் முதலா
வரினந் தாதி வந்தவம் மொழியே
அடிமுழு தும்வரின் இரட்டை அவைதாம்
சேருத லில்லது செந்தொடை நாமம்
பெறுமிவை எட்டும் தொடையென மொழிப.

[தொடை விகற்பங்களினியல்பு]

27. இருமுதற் சீர்மிசை இணைபொழிப் பிடையிட்
டிருசீ ரிடையிட் டொருவாம் ஈறிலி
கூழை முதலிறு வாயயல் குறைந்தன
மேல்கீழ்க் கதுவாய் மேவிய நாற்சீர்
முழுவதும் ஒன்றின் முற்றும் ஏழும்
மோனை முதலா ஐந்தொடை பெறுமே.

[சிறப்புவிதி]

28. எதுகை மோனைக் கினவெழுத் திழுக்கார்.

[வேறு சில தொடை விகற்பங்கள்]

29. கடையே கடையிணை பின்கடைக் கூழையொ
டிடைப்புணர் வென்பவும் இயம்புந ருளரே.

7. பாவியல்.

[பா இன்னதென்பது]

30. கூறிய உறுப்பிற் குறைபா டின்றி
நேரிய இசையொடு நிகழ்வது பாவே.

[பாவகை]

31. வெண்பா ஆசிரியங் கலியே வஞ்சியொ
டின்னிசை மருட்பா வெனப்பா வைந்தே.

வெண்பா,

[வெண்பாவின் பொதுவிலக்கணம்]

32. ஓரசைச் சீருமொண் காசும் பிறப்பும்
இற்றசிந் தடியே ஈற்றடி ஏனைய
நேரடி யாகவும் நிறைவமை செப்பல்
இசையுடன் வெண்சீர் இயற்சீர் தன்றளை
இயந்தமை விகற்பொடும் இயல்வது வெண்பா.

[வெண்பாவின் விரி]

33. அதுவே,
குறளே நேரிசை இன்னிசை சிந்தியல்
பஃறொடை எனவைந் தாமெனப் பகர்ப.

[குறள் வெண்பா.]

34. அவற்றுள்,
ஈரடி வெண்பாக் குறளென விசைப்ப.

[நேரிசை வெண்பா]

35. குறளிரண் டியைந்ததன் இடையினிற் குறைவகல்
நெறிபெறு தனிச்சொலின் நிறைந்தடி முடிந்தொரு
விகற்பினும் இரண்டினும் விளங்குதல் நேரிசை.

[இன்னிசை வெண்பா]

36. ஈரிரண் டடியாய்த் தனிச்சொல் லில்லா
தொன்றும் பலவும் விகற்பொடு முடிநவும்
நேரிசை வெள்ளையில் நேரா தியன்றவும்
இன்னிசை வெண்பா என்மனூர் புலவர்.

[சிந்தியல் வெண்பாக்கள்]

37. நேரிசை இன்னிசை வெள்ளையின் நடந்து
மூவடி யானிறின் நேரிசை இன்னிசைச்
சிந்திய லாமெனச் செப்பினர் புலவர்.

[பஃறொடை வெண்பா]

38. பலவடி நடையின பஃறொடை என்ப.

[வெண்பாவிற்கு புறனடை]

39. வேற்றடி சீர்தளை வெள்ளையுள் விரவார்.

ஆசிரியப்பா.

[ஆசிரியப்பாவின் பொதுவிலக்கணம்]

40. இயற்சீர் தன்றளை இயைந்தும் அயலவை
அருகியும் அணிசேர் அகவல் ஓசையின்
அளவடி யொடுவரல் ஆசிரியம்மே.

[ஆசிரியப்காவின் விரி]

41. அதுவே,
நேரிசை இணைக்குறள் நிலைமண் டிலமே
அடிமறி மண்டில மெனநால் வகைத்தே.

42. அவற்றுள்,

[நேரிசை ஆசிரியப்பா]

ஈற்றடி சிந்தடி யாய்வரல் நேரிசை.

[இணைக்குறளாசிரியப்பா.]

43. இடையிடை குறளடி சிந்தடி பயின்று
நடைபெறு மிணைக்குறள் அசிரியம்மே.

[நிலைமண்டில ஆசிரியப்பா]

44. அடியள வொப்பது நிலைமண் டிலமே.

[அடிமறிமண்டில ஆசிரியப்பா]

45. முதலிடை கடையென முறையுறு மடிகள்
நிலைபிறழ்ந் திசைப்பினும் பொருள்நிலை திரியா
தமைவன அடிமறி மண்டில மாகும்.

கலிப்பா.

[கலிப்பாவின் பொது இலக்கணம்]

46. நிரைமுதல் வெண்சீர் நிலவியும் தன்றளை
விரவியும் அயற்சீர் அயற்றளை அருகியும்
ஓங்கிய துள்ளல் ஓசையின் நேரடி
தாங்கிய இயல்பின் தரவே தாழிசை
அம்போ தரங்கம் அராகம் தனிச்சொல்
சுரிதக மெனுமா றுறுப்பொடும் தோன்றி
நெறிபெறுங் கலிப்பா வருமென மொழிப.

[கலியின் வகை]

47. ஒத்தா ழிசைக்கலி வெண்கலி கொச்சகக்
கலியென மூவகைத் தாகும் அதுவே.

[அவற்றின் விரி.]

48. அவற்றுள்,
ஒத்தா ழிசையே
நேரிசை அம்போ தரங்கம் வண்ணகம்
என்றும் வெண்கலி கலிவெண் பாவே
வெண்கலி என்றும் கொச்சகக் கலிதான்
தரவே தரவிணை சிலபல தாழிசை
மயங்கிசை என்றும் வியங்கொள வருமே.

[நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா.]

49. அவற்றுள்,
தரவொன் றாகித் தாழிசை மூன்றாரு
தனிச்சொற் சுரிதகம் எனுநான் குறுப்பொடும்
நிகழ்வது நேரிசை ஒத்தா ழிசையே.

[அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா]

50. அசையடி கூன்முன் அமைந்தைந் துறுப்பொடும்
இசைவதை யம்போ தரங்கம் என்ப.

[வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா.]

51. அசையடி முன்னர் அராகம் வாந்தா
றுறுப்பொடும் வண்ணகம் வருமென உரைப்ப.

[கலிவெண்பா]

52. வெண்டளை விரவிச் சிந்தடி முடிவாய்
அகப்பொருள் தழுவிய அடிபல வாயிறின்
கலிவெண் பாவெனக் கருதினர் புலவர்.

[வெண்கலிப்பா]

53. கலித்தளை பயின்றும் கடையடி சிந்தாய்
விடினது வாகும் வெண்கலிப் பாவே.

[தரவு கொச்சகக் கலிப்பா]

54. தரவே தனித்தும் தனிச்சொற் சரிதகம்
தாங்கியும் வரினவை தரவுகொச் சகமே.

[தரவிணைக் கொச்சகக் கலிப்பா]

55. தரவிரண் டாய்வரல் தரவிணை என்ப.

[சிஃறுாழிசைக் கொச்சகக் கலிப்பா]

56. தரவொடு தாழிசை மூன்றவை யிடையிடைத்
தனிச்சொல் விரவிச் சுரிதகத் தாலிறின்
சிஃறு ழிசையெனச் செப்புவர் புலவர்.

[பஃறுாழிசைக் கொச்சுகக் கலிப்பா]

57. பலதா ழிசைவரின் பஃறுாழிசையே.

[மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா]

58. கூறிய உறுப்பிற் குறைந்தும் பிறழ்ந்தும்
மாறியும் அதனியல் மயங்கியும் மிக்கும்
வருவன மயங்கிசைக் கொச்சகக் கலியே.

[கலியுறுப்புக்களின் இயல்]

[தரவு தாழிசை]

59. தரவின் சிறுமை மூன்றடி பெருமை
இரட்டுதல் தாழிசை இரண்டும் நான்கும்
தரவிற் குறுகிசை சுருங்கும் என்ப.

60. அசையடி வண்ணகக் காறே தரவு.

[அராகம்]

61. அளவடி முதலா அனைத்தடி யானும்
நான்கடி முதலா எட்டடி ருக
வருவது வண்ணகத் தியல்பென மொழிப.

[அம்போதரங்கம்]

62. அளவடி இவ்விரண் டாதலும் நான்காய்
அமைதலும் சிந்தடி இருநான் காதலும்
குறளடி இரட்டலும் குறைதலும் எண்ணியல்.

[சுரிதகம்]

63. வெண்பா இயலினும் ஆசிரிய இயலினும்
சுரிந்துநின் றிறுதல் சுரிதகம் என்ப.

வஞ்சிப்பா.

[பொதுவிலக்கணமும் வகையும்]

64. தன்சீர் பொதுச்சீர் தன்றளை பயின்றும்
அயலவை அருகியும் குறளடி யானும்
சிந்தடி யானும் சீரிய தூங்கல்
இசையொடு குறையா வாரத் திறுதல்
வஞ்சியின் மரபென வகுத்தனர் புலவர்.

மருட்பா.

[மருட்பாவினியலும் அது பயிலுமிடமும்]

65. வாயுறை புறநிலை வாழ்த்தே கைக்கிளை
செவியறி வெனுநாற் பொருள்மிசை வெண்பா
முதல்வந் தகவல் பின்வரல் மருட்பா.

8. இனவியல்.

இனமென்றதன் காரணமும் வகையும்]

66. தாழிசை துறையே விருத்தமிம் மூன்றும்
பாவினம் பாவின் பாற்பட் டியலும்.

[குறள்வெண்பா இனம்—குறள்வெண் செந்துறை]

67. விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும்
உற்றடி இரண்டள வொப்பது செந்துறை.

[குறட்டாழிசை]

68. அந்தங் குறைநவும் செந்துறைச் சிதைவும்
சந்தழி குறளும் குறட்டா ழிசையே.

69. கூறிய விரண்டும் குறட்பா வினமே.

[வெண்பா இனம்—வெண்டாழிசை]

70. மூன்றடி யாகத் தனித்தும் மூன்ருய்
ஆன்ருெரு பொருண்மேல் அடுக்கியும் வெள்ளையின்
இறுமெனின் வெண்டா ழிசையென மொழிப.

[வெண்டுறை]

71. மூன்றடி முதலா ஏழடி யளவும்
நின்றுபின் அடிசில சீர்தப நிற்றலும்
வேற்ருெலி விரவலும் வெண்டுறை யாகும்.

[வெளி விருத்தம்]

72. மூன்றடி யானும் முடிந்தடி தோறும்
தனிச்சொல் வந்து தழுவுதல் விருத்தம்.

[ஆசிரியப்பா இனம்—ஆசிரியத் தாழிசை]

73. அகவற் ருழிசை அடிமூன் ருெத்தும்
இகலில் மூன்ருய் அடுக்கியும் இயலும்.

[ஆசிரியத்துறை]

74. இடையிடை குறைந்தும் ஈற்றடி நைந்தும்
இடைமடக் காயும் ஈரிரண் டடியான்
நடைபெறு மாசிரி யத்துறை என்ப.

ஆசிரிய விருத்தம்]

75. கழிநெடி லடிநான் கொப்பது விருத்தம்.

தொடரும்